DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | Kirubanandham | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 09.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5present. A2 died

முதல் விசாரணை

நான் திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து கட்டிடவேலை செய்து வருகிறேன். சாட்சி அப்புசாமியை தெரியும். என்னுடன் வெட்டுப்பட்டவர். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன 2 வது எதிரி செல்வத்தை தெரியும். எங்கள் ஊரில் விநாயகர் கோவில் உள்ளது. அது ஐயாறப்பர் கோவில் நிர்வாகத்திற்கு உட்பட்டது. அந்த இடத்தில் நந்தியன்பெருமான் குளம் உள்ளது. அந்த குளத்தில் மீன் வளர்ப்பதற்கும், பிடித்து விற்பதற்கும் வருடத்திற்கு ஒரு முறை ஏலம் விடப்படும். 2023 ஆம் வருடத்திற்கான ஏலத்திற்கு எங்களுக்கு அழைப்பு வந்தது. ஏலத்தேதி 23.08.2023 ஆகும். ஏலத்திற்கு கலந்து கொள்ள நானும், அப்புசாமியின் மகன் பிரபுநாத். என் மகன் இளங்கோவன் கலந்து கொண்டோம் அன்று 12 மணியளவில் ஏலம் விடப்பட்டது. நான் ரூ.39000/- ஏலம் எடுத்தேன். இதற்கு முந்தைய வருடம் ஏலம் எடுத்த அருண், செல்வம், துளசி ஆகியோர் நீங்கள் எவ்வாறு ஏலம் எடுக்கலாம் என்றும் எவ்வாறு மீன் பிடிக்கிறாய் என்று பார்த்துக்கொள்கிறோம் என்று 1 முதல் 3 எதிரிகள் கூறியதால் சலசலப்பு ஏற்பட்டது. அங்கு உள்ளவர்கள் சமாதானம் செய்து வைத்தார்கள். பிறகு 1 வது எதிரி துளசி நான் மீன் விட்டுள்ளேன். எனக்கு ரூ.25000/- பணம் கொடு என்று கேட்டார். அங்குள்ளவர்கள் பேசி ரூ.20000/- கொடுங்கள் என்று சொன்னதால் அதே இடத்தில் ரூ.20000/- கொடுத்து விட்டு வந்துவிட்டேன். மறுநாள் 24.08.2023 ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் திருவையாறு விலாங்குடி ரோட்டில் உள்ள ஒயின்ஸ் ஷாப் அருகில் உள்ள சதிஷ் ஹோட்டலுக்கு நானும், அப்புசாமியும் சென்றோம். ஓட்டலில்

சதிஷம், ஜனார்த்தனன் இருந்தார்கள். நாங்கள் ேஹாட்டலில் பேசிக்கொண்டிருந்தோம். சுமார் இரவு 7.30 மணியளவில் 1வது எதிரி துளசி, 4வது எதிரி சதிஷ்குமார், 5வது எதிரி முருகானந்தம், 3வது எதிரி அருண், 2வது எதிரி செல்வம் ஆகியோர் அங்கு வந்தார்கள். 1வது எதிரி துளசி தன் இடுப்பில் இருந்து அரிவாளை எடுத்து எனது தலையில் வெட்ட வந்தார், நான் தடுத்ததில் எனது இடது மேல் கையில் வெட்டுப்பட்டது, பிறகு அரிவாளால் நடுத்தலையில் வெட்டினான். பிறகு 1வத் எதிரி துளசி என்னுடன் இருந்த அப்புசாமியை அரிவாளால் தலையில் வெட்டினார். அங்கு உள்ளவர்கள் சத்தம் போட்டதும் 5 எதிரிகளும் ஓடிவிட்டார்கள். ஓட்டல் நடத்தும் சதிஷகுமார் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்தார். என்னையும், அப்புசாமியையும் ஆம்புலன்சில் ஏற்றி தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனது மகன் இளங்கோவிற்கு ஒட்டல் நடத்தும் சதிஷ்குமார் போன் செய்து மருத்துவமனைக்கு வரவழைத்தார். பிறகு இரவு 10.00 மணிக்கு போலிசார் ரவிச்சந்திரன் வந்து என்னை விசாரித்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். அந்த புகார் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அந்த புகார் வாக்குமூலம்தான் என்னிடம் காட்டப்படுவது. அது அ**.**த**.**சா**.**ஆ**.1**. நீதிமன்றத்தில் உள்ள அரிவாளால்தான் என்னையும், அப்புசாமியையும் வெட்டினார். அந்த அரிவாள் சா**.**பொ**.1**. பின்னர் 25.08.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் பெண் ஆய்வாளர் வனிதா என்பவர் என்னை விசாரித்தார். நான் மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

குறுக்கு விசாரணைக்காக 10.01.2026 ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்- G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | Appusamy | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 09.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5present. A2 died

முதல் விசாரணை

நான் திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீடு. ஆஜர் எதிரிகளையும், இறந்து போன 2வது எதிரி செல்வத்தையும் தெரியும். திருவையாறு ஐயாறப்பர் கோவில் நந்தியபெருமான் குளத்துக்கு வருடாவருடம் மீன் ஏலம் விடுவார்கள். 23.08.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஏலம் விடுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்தது. நானும், கிருபானந்தமும், இளங்கோவன், பிரபு நாத் ஆகியோர் நால்வரும் ஏலம் எடுக்க ஐயாறப்பர் கோவிலுக்கு சென்றோம். மீன் பிடிக்கும் ஏலத்தை அ.சா.1 ரூ.39000/- க்கு எடுத்தார். அப்போது அங்கு இருந்து இறந்துபோன 2வது எதிரி செல்வம், 3வது எதிரி அருண், 1வது எதிரி துளசிராமன் ஆகிய மூவரும் எங்களுக்கு போட்டியாக குளத்தை ஏலம் எடுப்பிர்களா, இதற்கு முந்தைய வருடம் ஏலம் எடுத்து பாதி மீன் பிடிக்காமல் உள்ளது அதற்காக ரூ.25000/- பணம் கொடுங்கள் என்று 1வது எதிரி கேட்டார். அங்கு இருந்தவர்கள் பேசி ரூ-20000/- கொடுக்குமாறு அ.சா.1 டம் சொன்னார்கள். அ.சா.1ம் உடனே ரூ.20000/-த்தை 1வது எதிரியிடம் கொடுத்தார். 24.08.2023 ஆம் தேதி திருவையாறு விலாங்குடி சாலையில் உள்ள ஒயின்ஷாப்பிற்கு அருகில் உள்ள சதிஷ்குமார்நடத்தும் ஓட்டலுக்கு நானும், அ.சா.1 கிருபானந்தமும் இரவு 7.30 மணிக்கு சென்றோம். அங்கு நானும், அ.சா.1,ம் ஓட்டல் உரிமையாளர் சதிஷ்குமார் மற்றும் ஜனார்த்தனன் ஆகிய நால்வரும் பேசிக்கொண்டிருந்தோம். திடீரென 1முதல் 5

எதிரிகள் இரவு 7.30 மணிக்கு உள்ளே வந்து என்னையும், அ.சா. 1யும் பார்த்து 1வது எதிரி துளசி ராமன் 2 தேவடியாமவனுங்க உட்கார்ந்திருக்காங்க அவர்களை பிடிங்கடா என்று சொன்னதும், அ.சா.1யை 4,5 எதிரிகள் பிடித்துக்கொண்டார்கள். என்னை இறந்து போன 2வது எதிரியும், 3வது எதிரியும் பிடித்துக்கொண்டார்கள். 1வது எதிரி துளசிராமன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து நீ உயிரோடு இருந்தால்தானே மீன் பிடிப்பாய் என்று ஓங்கி அவரது தலையை வெட்டியபோது அவர் ஒதுங்கியபோது இடது மேல் கையில் பட்டது. மீண்டும் நல்லா பிடிச்சிங்கங்கடா என்று சொல்லி தலையில் ஓங்கி அரிவாளால் வெட்டினார். என்னை பார்த்து துளசி பெயரை கேட்டாலே ஊரே நடுங்கும், நீ கிருபானந்ததற்கு ஆதரவாக வருகிறாயா என்று சொல்லி அரிவாளால் வலதுப்பக்க தலையில் வெட்டினார். ஒயின்சாப்பில் இருந்தவர்கள் சத்தம் போட்டு ஓடி வந்ததும், 1முதல் 5 எதிரிகள் ஓடிவிட்டனர். பின்னர் ஓட்டல் உரிமையாளர் சதிஷ்குமார் 108 ஆம்புலன்சுக்கு போன்செய்து என்னையும், அ.சா.1யும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வந்து அவசர சிகிச்சைப்பிரவில் சேர்த்தார். நான் வெட்டுப்பட்டதை கேள்விப்பட்டு என் மகன் பிரபு நாத் மருத்துவமனைக்கு வந்து பார்த்தார். இரவு 10.30 மணிக்கு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மருத்துவமனைக்கு வந்து அ.சா.1யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். நான் 2 நாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1.அரிவாளால்தான் என்னையும், அ.சா.1யும் 1வது எதிரி வெட்டினார். 25.08.2023 ஆம் தேதி ஆய்வாளர் வனிதா அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

குறுக்கு விசாரணைக்காக 10.01.2026 ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.
(ஒ/ம்- G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -3

| | | |
|---|---|---|
| Name | Sathishkumar | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5present. A2 died

<u>முதல் விசாரணை</u>

நான் திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து ASS என்ற பெயரில் ஓட்டல் நடத்தி வருகிறேன். அ.சா.1,2 யை தெரியும். ஆஜர் எதிரிகள் மற்றும் இறந்துபோன 2வது எதிரியை தெரியும். 24.08.2023 ஆம் தேதி இரவு 7.00 மணிக்கு நான் என்னுடைய ஓட்டல் கடையில் இருந்தேன். அப்போது அ.சா.1,2 என் கடைக்கு வந்தார்கள். குளம் ஏலம் விசயம் சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். ஓட்டலில் பார்சல் வாங்கவந்தவர்களும் இருந்தார்கள். இரவு சுமார் 7.30 மணியளவில் 1வது துளசிராமன் மற்றும் 2 முதல் 5 எதிரிகள் ஓட்டலுக்கு வந்து அங்கு உட்கார்ந்திருந்த அ.சா.1,2 யை பார்த்து இங்கு உட்கார்ந்திருக்கனுங்கடா அவர்களை பிடிங்கடா என்று சொன்னதும், 4,5 எதிரிகள் அ.சா.1யை பிடித்துக்கொண்டார்கள். அ.சா.2யை 2,3 எதிரிகள் பிடித்துக்கொண்டார்கள். பின்னர்1வது எதிரி அரிவாளால் அ.சா.1ன் இடது மேல் கையில் வெட்டினார். பின்னர் அ.சா.1ன் தலையில் அரிவாளால் வெட்டினார். பின்னர் அ.சா.2 அப்புசாமியை 1வது எதிரி அரிவாளால் தலையில் வெட்டினார். அங்கு உள்ளவர்கள் சத்தம் போட்டதும், 1 முதல் 5 எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள். பிறகு நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து அ.சா.1,2 யையும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். பிறகு 1,2 ன் மகன்கள் பிரேம்நாத் மற்றும் இளங்கோ ஆகியோருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். இரவு 10.30 மணிக்கு ரவிச்சந்திரன் போலிசார் அ.சா.1யை விசாரித்து

புகார் வாக்குமூலம் பெற்றார். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். 25.08.2023 ஆம் தேதி காலை 7.00 மணி வாக்கில் காவல் ஆய்வாளர் என் கடைக்கு வந்து நடந்ததை விசாரித்தார்கள். பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்து அக்கம்பக்கம் உள்ளவர்களின் பெயர் விசாரித்து பார்வை மகசர் தயார் செய்து அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் ஜனார்த்தனன் என்பவரும் கையெழுத்து போட்டார். காட்டப்படும் 25.08.2023 ஆம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள முதல கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகசர் அ**.**த**.**சா**.**ஆ**.2**. நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1 அரிவாளால்தான் 1வது எதிரி அ.சா.1,2 யை வெட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

குறுக்கு விசாரணைக்காக 10.01.2026 ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்- G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -4

| | | |
|---|---|---|
| Name | Prabhunath | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5present. A2 died

முதல் விசாரணை

நான் திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து தஞ்சாவூர் புண்ணியமூர்த்தி பிள்ளை டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.2 என் அப்பா. அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரிகளையும், இறந்துபோன செல்வத்தையும் தெரியும். 23.08.2023 ஆம் தேதி திருவையாறில் உள்ள பிள்ளையார்கோவில் குளம் ஜயாறப்பர் கோவிலுக்கு சொந்தமானதாகும். அந்த குளத்தில் மீன் பிடிக்கும் ஏலம் எடுப்பதற்காக பகல் 12.00 மணிக்கு ஜயாறப்பர் கோவிலுக்கு நானும், என் அப்பாவும் அ.சா.1 கிருபானந்தமும்,அவரது மகன் இளங்கோவனும் சென்று இருந்தோம். குளத்தில் மீன் பிடிக்க அ.சா.1 ரூ.39000/-க்கு ஏலம் எடுத்தார். 2022 வருடம் குளத்தை ஏலம் எடுத்த 1 வது எதிரி துளசி என்பவர் தான் குளத்தில் ரூ.25000/- மதிப்பிலான மீன் பிடிக்காமல் உள்ளது என்று கூறி பணம் கேட்டார் அங்கு உள்ளவர்கள் பேசி ரூ.20000/- அ.சா.1 டம் இருந்து வாங்கி 1 வது எதிரியிடம் கொடுத்தார்கள். பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். 24.08.2023 ஆம் தேதி என் அப்பாவும், அ.சா.1 ம் திருவையாறு உள்ள ஒயின்சாப்பிற்கு பக்கத்தில் உள்ள அ.சா.3 ன் ஓட்டல் கடைக்கு சென்றார்கள். அந்த ஓட்டலில் என் அப்பாவும், அ.சா.1 ம் , அ.சா.3 உடனும், ஜனார்த்தனனுடன் உட்கார்ந்து ஏலம் எடுத்தது சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது 1 முதல் 5 எதிரிகள் ஓட்டலுக்கு வந்து என் அப்பாவையும், அ.சா.1 யும் பார்த்து இங்கதான் உட்கார்ந்திருங்களா தேவடியாமவனுங்களா என்று சொல்லி அவனுங்களா பிடிங்கடா என்று சொன்னதும், 4,5 எதிரிகள் அ.சா.1 யை பிடித்துக்கொண்டார்கள். என் அப்பா

அ.சா.2யை 2,3 எதிரிகள் பிடித்துக்கொண்டார்கள். 1வது எதிரி அரிவாளால் அ.சா.1யை வெட்டினார். அதை அவர் தேக்கியபோது இடது மேல் கையில் வெட்டுப்பட்டது. பின்னர் அரிவாளால் அ.சா.1ன் நடு மண்டையில் வெட்டி செத்துவிட்டான் என்று உதைத்து தள்ளிவிட்டார். அ.சா.1க்கு சப்போட்டா என்று சொல்லி என் அப்பாவை தேவடியாமவனே என்று திட்டி அரிவாளால் தலையில் வெட்டி உதைத்து தள்ளியுள்ளார். பக்கத்தில் சத்தம் போட்டதும் 1 முதல் 5 எதிரிகள் ஓடிவிட்டார்கள். அ.சா.3 எனக்கு போன் செய்து என் அப்பாவை வெட்டிவிட்டதாகவும், 108 ஆம்புலன்சுக்கு போன் செய்துவிட்டேன். தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்துவிடுமாறு சொன்னார். நான் இரவு 8.45 மருத்துவமனைக்கு சென்று பார்த்துபோது என் அப்பாவிற்கு தலையில் வெட்டுப்பட்டிருந்தது. இரவு 10.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் வந்து அ.சா.1யை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். எழுதியதை படித்து காண்பித்து கையெழுத்து வாங்கினார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

குறுக்கு விசாரணைக்காக 10.01.2026 ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்- G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -5

| | | |
|---|---|---|
| Name | இளங்கோவன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 09.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3,A4,A5present. A2 died

முதல் விசாரணை

நான திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா. அ.சா.2 யை தெரியும். ஆஜர் எதிரிகளையும், இறந்துபோன செல்வத்தையும் தெரியும். 23.08.2023 ஆம் தேதி திருவையாறில் உள்ள பிள்ளையார்கோவில் குளம் ஐயாறப்பர் கோவிலுக்கு சொந்தமானதாகும். அந்த குளத்தில் மீன் பிடிக்கும் ஏலம் எடுப்பதற்காக பகல் 12.00 மணிக்கு ஐயாறப்பர் கோவிலுக்கு நானும், என் அப்பாவும் அ.சா.2 அப்புசாமியும்,அவரது மகன் பிரபுநாத்தும் சென்று இருந்தோம். குளத்தில் மீன் பிடிக்க என் அப்பா ரூ.39000/-க்கு ஏலம் எடுத்தார். 2022 வருடம் குளத்தை ஏலம் எடுத்த 1 வது எதிரி துளசி என்பவர் தான் குளத்தில் ரூ.25000/- மதிப்பிலான மீன் விட்டுள்ளோம் என்று கூறி பணம் கேட்டார் அங்கு உள்ளவர்கள் பேசி ரூ.20000/- என் அப்பாவிடம் இருந்து வாங்கி 1 வது எதிரியிடம் கொடுத்தார்கள். பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். 24.08.2023 ஆம் தேதி என் அப்பாவும், அ.சா.2 அப்புசாமியும் திருவையாறு உள்ள ஒயின்சாப்பிற்கு பக்கத்தில் உள்ள அ.சா.3 ன் ஓட்டல் கடைக்கு சென்றார்கள். இரவு 7.45 மணிக்கு அ.சா.3 எனக்கு போன் செய்து என் அப்பாவை வெட்டிவிட்டதாக சொன்னார். என்ன பிரச்சனை கேட்டேன், குளத்தில் ஏலம் எடுப்பது சம்மந்தமா 1 வது எதிரி துளசிராம் என் அப்பாவை வெட்டி விட்டதாகவும், 4,5 எதிரிகள் என் அப்பாவை பிடித்துக்கொண்டதாகவும், அ.சா.2 யை 2,3 எதிரிகள் பிடித்துக்கொண்டதாகவும், அவரையும் 1 வது துளசிராமன் அரிவாளால்

வெட்டியதாக சொன்னார். நான் 108 ஆம்புலன்சு பின்னால் சென்று மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் என் அப்பாவை பார்த்தபோது என் அப்பாவின் தலையிலும், இடது மேல் கையில் வெட்டிப்பட்டு இருந்தது. என் அப்பாவை அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இரவு 10.30 மணிக்கு போலிசார் ரவிச்சந்திரன் வந்து அப்பாவை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார். அதை படித்து காண்பித்து என் அப்பாவிடம் கையெழுத்து வாங்கினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

குறுக்கு விசாரணைக்காக 10.01.2026 ஆம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்- G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்